நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2020 யூலை 16 | சுற்றறிக்கை | 2020இன் 07ஆம் இலக்கம்

---

## கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரம் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள்

கொவிட்-19 தொற்று, சுற்றுலாத் துறை வியாபாரங்களின் மீதும் தனிப்பட்டவர்களின் மீதும் கொண்டிருக்கக்கூடிய மோசமான தாக்கத்தின் சாத்தியத்தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி, தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்குப் பின்வரும் நிவாரண வழிமுறைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பனவற்றினை (இதனகத்துப் பின்னர் நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும்) கேட்டுக் கொண்டிருக்கிறது.

1. 2020 மாச்சு 27ஆம் நாள் விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2ஆம் மற்றும் 3ஆம் பந்திகளின் நியதிகளில் வழங்கப்பட்ட தற்போதுள்ள 6 மாத சட்ட இசைவுத்தாமதத்தினை, சுற்றுலா தொடர்பான ஊர்திகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகளின் வெளிநின்ற மூலதனத்தினைப் பொறுத்தவரை நிதிக் கம்பனிகள் 12 மாதங்களுக்கு நீடித்தல் வேண்டும்.

2. நிதியியல் நிறுவனங்கள் மேலே பந்தி (1)இல் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்து சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில், கடன்பாட்டாளர்களுக்கு வசதியீனங்கள் ஏற்படாத விதத்தில் வட்டியை அறவிட்டுக் கொள்ளலாம்.

3. நிதியியல் நிறுவனங்கள் சுற்றுலா தொடர்பான ஊர்திகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகள் தொடர்பான ஒன்றுசேர்ந்த தண்ட வட்டியைத் தள்ளுபடி செய்துவிடல் வேண்டும்.

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்